# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

## <u>அ.வ.எண். 50/2020</u>

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு. ராஜா முகமது, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2023 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 08.08.2023**

**பெயர் - சிவபூசனம் (வாதிகளின் முகவர்)**

**த/பெ - அமாவாசை**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 01.15 p.m.**

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>-**

3. (1). 29.08.2018 தேதியிட்ட சகுந்தலா என்பவரின் மதிப்பிட முடியாத உயில் சாசனத்தின் அசல் **<u>(வாசா ஆ 14)</u>** (பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் மேற்படி உயில் சாசனத்தின் உண்மை தன்மை குறித்து ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>குறுக்கு விசாரணை-</u>**

4. எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் அடிக்கடி காவல் நிலையம் சென்று கட்டபஞ்சாயத்து பேசுவதால் நாங்கள் நீதிமன்றத்தில் இவ்வழக்கினை தாக்கல் செய்தோம். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது தொழில் என்னவென்றால் விவசாயம் ஆகும். வழக்கு சொத்தின் விஸ்தீரணம் என்ன வென்றால் 1 ஏக்கர் 60 சென்ட் ஆகும். வழக்கு தாக்கல் செய்வதற்கான விவரங்களை யார் கூறி வழக்கறிஞரால் தயாரிக்கப்பட்டது என்றால் நாங்கள் கூறிதான் தயார் செய்யப்பட்டது. கிருஷ்ணவேனியம்மாளை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் 2005ல் பார்த்தேன். அப்போது எனக்கு என்ன வயது இருக்கும்

என்றால் 18 அல்லது 19 வயது இருக்கும். எதற்காக அவரை பார்த்தேன் என்றால் தாவா சொத்து சம்மந்தமாக தான் பார்த்தேன்.

5. வழக்கு சொத்து கிருஷ்ணவேனியம்மாளுக்கு மூதாதையர் மூலம் கிடைக்கப்பட்ட சொத்து என வாதுரையிலும் பிரமான வாக்குமூலத்திலும் நான் தெரிவித்துள்ளேன் என்றும் அதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள 14 ஆவணங்களில் எந்த ஆவணம் மேற்படி சங்கதியை நிரூபிக்கும் வகையில் உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. வழக்கு சொத்து கிருஷ்ணவேனியம்மள் கிரையம் பெற்ற சொத்தா அல்லது கிருஷ்ணவேனியம்மாளின் பூர்வீக சொத்தா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாசா ஆ 9 செட்டில் மென்ட் பத்திரத்தில் கிருஷ்ணவேனியம்மாளுக்கு எவ்வாறு வழக்கு சொத்து வந்ததாக உள்ளது என்றால் பூர்வீகமான கிடைக்கப்பட்டதாக அதில் கண்டுள்ளது.

6. மேற்படி கிருஷ்ணவேனியம்மாளிடம் எதன் அடிப்படையில் பூர்வீகமாக கிடைக்கப்பட்டது என்று நான் கேட்டேனா என்றால் கேட்டேன். அவர் எதன் அடிப்படையில் பூர்வீகமாக தனக்கு கிடைக்கப்பட்டதாக தெரிவித்தார் என்றால் கிருஷ்ணவேனியம்மாளின் கணவரான பால ரத்தினத்தின் சொத்து அது. நான் தாக்கல் செய்த வாசா ஆ 14 உயில் ஆவணத்தை ஏன் பதிவு செய்யப்பட்டவில்லை என்றால் எனக்கு தெரியாது. பொதுவாக ஒரு சொத்து குறித்து பத்திரம் எழுதினால் அதை பதிவு செய்யவேண்டும் என எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாசா ஆ 14 உயில் சாசனம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் சகுந்தலா-வின் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. மேற்படி உயில் சாசனம் எழுதியபோது யார் யார் உடன் இருந்தது என்றால் நான் சிவபூசனம், மகேஷ், கோபி, நாராயணன், ஸ்டாலின், கோவிந்தசாமி ஆகியோர் இருந்தனர். இவர்கள் மட்டுமே அங்கு இருந்தனரா என்றும் வேறு யாரும் இல்லையா என்றால் வேறு யாரும் இல்லை.

7. உயிலில் உள்ள சங்கதிகள் யார் தட்டச்சு செய்தது என்றால் சகுந்தலா தரப்பில் ஏற்கெனவே தயார் செய்து வைக்கப்பட்டு இருந்தது. எங்களை அழைத்தன் பெயரில் ஊர் மக்களை அழைத்து கொண்டு சென்றேன். ஏற்கெனவே சகுந்தலா மேற்படி ஆவணத்தில் கையொப்பம் இட்டு எங்களிடம் கொடுத்தாரா என்றால் இல்லை எங்கள் முன்னிலையில் தான் கையொப்பம் இட்டார். யார் யார் மேற்படி உயில் சாசனத்தில் சாட்சி கையொப்பம் இட்டது

என்றால் நாராயணன், ஸ்டாலின், கோவிந்தசாமி மற்றும் சகுந்தலாவின் தங்கை கணவர் ஆகியோர் சாட்சி கையொப்பம் இட்டனர். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் வாசா ஆ 7 என்ன ஆவணம் என்றால் சகுந்தலா அவர்களின் இறப்பு சான்றிதழ் ஆகும். மேற்படி சான்றிதழின் படி சகுந்தலா அம்மாள் எப்போது இறந்தார் என்றால் 09.01.2019 அன்று இறந்தார்.

8. வாசா ஆ 14 உயில் சாசனம் எழுதியதாக கூறப்படும் தேதியில் இருந்து 5 மாத காலத்திற்குள் சகுந்தலா இறந்தார் என்றால் சரிதான். வாசா ஆ 8 வில்லங்க சான்றிதழின் படி 3ம் பக்கத்தில் 5வது பதிவில் சகுந்தலா பாபு மற்றும் ராஜேந்திரன் பெயரில் பொது அதிகாரம் எழுதிக்கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி பொது அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகல் தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் சாட்சி அடையாளம் காட்டியதன் பெயரில் **(பிசா ஆ 1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. மேற்படி வாசா ஆ 8 வில்லங்க சான்றிதழின் படி 3ம் பக்கத்தில் 6வது பதிவில் கிரைய ஆவணம் உள்ளது என்றும் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் 07.02.2019 தேதியிட்ட கிரைய ஆவணம் தான் மேற்படி ஆவணம் என்றால் சரிதான் சாட்சி மேற்படி ஆவணத்தை சாட்சி அடையாளம் காட்டியதன் பெயரில் மேற்படி கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் பதிவு எண் 976/2019 பதிவு அலுவலகம் திருவொற்றியூர் **(பிசா ஆ 2)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வாசா ஆ 8 வில்லங்க சான்றிதழின் படி 3ம் பக்கத்தில் 7வது பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ள கிரைய ஆவண ரத்து பத்திரம் தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் 16.03.2020 தேதியிட்ட கிரைய ஆவண ரத்து பத்திரம் என்றால் சரிதான். சாட்சி மேற்படி ஆவணத்தை பார்த்து அதை அடையாளம் காட்டியதன் அடிப்படையில் மேற்படி கிரைய ஆவண பத்திரத்தின் சான்றிட்ட நகல் ஆவண எண் 2091/2020 பதிவு அலுவலகம் சார் பதிவாளர் அலுவலகம் திருவொற்றியூரில் பதிவு செய்யப்பட்டது **(பிசா ஆ 3)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. மேற்படி பிசா ஆ 1 முதல் பிசா ஆ 3 வரையிலான ஆவணங்கள் குறித்து நான் எனது வழக்குரை மற்றும் பிரமான வாக்குமூலத்தில் ஏதேனும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரியல்ல குறிப்பிட்டுள்ளேன். நான் கூறுவது தவறு என்றும் நான் வேண்டும் என்றே மேற்படி

பிசா ஆ 1 முதல் பிசா ஆ 3 வரையிலான ஆவணங்களை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிசா ஆ 1 ஆன சகுந்தலா அம்மாள் பாபு மற்றும் ராஜேந்திரனுக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரம் குறித்து எனக்கு எப்போது தெரியும் என்றால் மேற்படி ஆவணம் எழுதிய அன்றே தெரியும். மேற்படி ஆவணம் எழுதும் போது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். என்னுடன் ராஜேஷ் மற்றும் மகேஷ் ஆகியோர் உடன் இருந்தனரா என்றால் ஆமாம். பின்னர் பாபு மற்றும் ராஜேந்திரன் ஆகிய பொது அதிகார முகவர்களிடம் இருந்து சகுந்தலம்மாளின் சொத்தினை நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய தேதி 07.02.2019 என்றால் சரிதான்.

11. மேற்படி கிரைய ஆவணமான பிசா ஆ 2ல் 3வதாக ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள (சிவபூசனம்) கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பதிவு செய்த அன்று சகுந்தலா உயிருடன் இருந்ததை ஊர்ஜிதம் செய்யும் வகையில் மருத்துவர் முன்னிலையில் கையொப்பம் இட்டதாக கூறி Life Certificate ஒன்று பிசா ஆ 2ல் பக்கம் 15ல் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சான்றிதழில் மருத்துவர் கண்ணன் தனது முன்னிலையில் சகுந்தலம்மாளின் புகைப்படம் ஒட்டப்பட்டதாகவும் 07.02.2019 அன்று தனது முன்னிலையில் கையொப்பம் இட்டதாகவும் கூறி சான்றிட்டுள்ளார் என்றால் சரிதான். பிசா ஆ 2யை பிசா ஆ 3ன் படி ரத்து செய்துள்ளேன் என்றும் அதற்கான காரணம் என்னவென்றால் மேற்படி சகுந்தலம்மாள் இறந்தது தெரியாமல் பொது அதிகார பத்திரத்தின் முன்னிலையில் பிசா ஆ 2 எழுதப்பட்டதால் சகுந்தலம்மாள் இறப்பு தெரிந்து அது ரத்து செய்யப்பட்டது. மேற்படி ஆவணத்தில் நானும் ஒரு தரப்பினர் என்றால் சரிதான்.

12. நான் மேற்படி கூறியதுபோல் பிசா ஆ 3ல் குறிப்பிடப்பட்டப்படவில்லை என்றும் அதில் கண்டுள்ள சொத்தின் அனுபவம் சகுந்தலா வசமே இருந்ததாகவும் அது கிரையம் வாங்கிய நபர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றும் அந்த காரணத்திற்காக பிசா ஆ 2 ரத்து செய்யப்படுவதாகவே பிசா ஆ 3ல் கண்டுள்ளது என்றால் சரிதான். வழக்கிற்காக சகுந்தலா இறந்த விவரம் பிசா ஆ 2ன் தேதிக்கு பின்னிட்டு தான் தெரியவந்ததாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சகுந்தலா இறந்த விரவம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2020ல் தான் தெரியவந்தது. மாதம் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. சகுந்தலா இறந்து தோராயமாக 5 அல்லது 6 மாதங்கள் கழித்து தெரியவந்தது. சகுந்தலா

இறந்தது எனக்கு யார் மூலம் தெரியவந்தது என்றால் சகுந்தலாவின் தங்கை கணவர் மூலம் தெரியவந்தது. அவரின் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. அவர் எனக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்தார். அவருடன் தற்போதும் தொடர்பில் உள்ளேனா என்றால் ஆமாம்.

13. கிருஷ்ணவேனியம்மாளின் மகள் தான் சகுந்தலா என்று வழக்குரையில் தெரிவித்துள்ளேன் என்றும் அதை நிரூபிக்கும் வகையில் ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் கிஷ்ணவேனியம்மாளின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். நான் கூறுவது தவறு என்றும் அதுபோல் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணம் என்னிடம் உள்ளது. அதை நீதிமன்றம் கொண்டுவர இயலுமா என்றால் இயலும். எனது வழக்கில் நான் கூறியது போல சகுந்தலா பொது மக்களுக்கு இலவசமாக தனது சொத்துக்களை கொடுக்கவேண்டும் என்பது போல பிசா ஆ 1ல் காணப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் 19.09.2018 ஆகும்.

14. உயில் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் 29.08.2018 அன்று எழுதப்பட்டது. பிசா ஆ 1 மற்றும் வாசா ஆ 14 ஆகிய இரு ஆவணங்கள் எழுதும் போது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். மேற்படி உயிலில் என்.மகேஷ், எ.சிவபூசனம், பி.கோபி ஆகியோர் பயணாளர்கள் என்றால் சரிதான். மேற்படி வாசா ஆ 14 உயில் சாசனம் எழுதிய 20 நாட்களில் அதே சொத்திற்கு சகுந்தலா எதற்காக பிசா ஆ 1 பொது அதிகார பத்திரம் பாபு மற்றும் ராஜேந்திரனுக்கு எழுதி கொடுக்கவேண்டும் என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. நான் மேற்படி இரு ஆவணங்கள் எழுதும் போதும் உடன் இருந்த நிலையில் நான் மேற்படி விவரம் குறித்து சகுந்தலாவிடம் கேட்டேனா என்றால் கேட்கவில்லை. வா.சா.ஆவணம் 14-ன் படி ஏற்கனவே எனக்கு சகுந்தலா சொத்தினை உயில்படி எழுதி வைத்த நிலையில் எதற்காக பி.சா.ஆ.2ன் படி அதை நான் ரூ.42,00,000-த்திற்கு கிரையமாக பெற்றேன் என்றால் சாட்சி தெரியவில்லை என்று பதிலளிக்கிறார்.

**விசாரணை முடியும் நேரம்- 02.35 p.m.**